ஒரு செயலைத் தொடங்க ஒருவரை ஊக்குவித்தாலும் அச்செயலில் அவர் காட்டும் ஈடுபாடுதான் அதனைத் தொடர்ந்து செய்துமுடிக்கக் காரணமாகிறது என்பதை உணர்த்திய சம்பவம்.

நீச்சல் குளத்தைச் சுற்றி நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் போட்டியாளர்களுக்கு உற்சாகமளித்துக்கொண்டிருந்த ஆரவாரம் வானத்தைப் பிளக்கும் வண்ணம் இருந்தது. ஆனால், என் செவிகளுக்கு ஒன்றும் எட்டவில்லை. வேகமாக நீந்து, வேகமாக நீந்து, என்று நான் எனக்கே கட்டளையிட்டுக்கொண்டிருந்தேன். நீச்சல் குளத்தின் முடிவு என் கண்களுக்கு முன்னால் தாண்டவமாடிக்கொண்டிருந்தது. கடைசி மூச்சினை வாங்கிக்கொண்டு, அந்தக் கால்களை உதைத்து, குளத்திலிருந்த இறுதிக் குறியீட்டை எட்டித் தொட்டேன். அப்போது எனக்கு ஏற்பட்ட உணர்வை என்னால் விளக்க முடியாது. குலத்தைவிட்டு வெளியேறினேன். பின்னால் திரும்பியபோது, என் சக போட்டியாளர் இறுதிக்குறியீட்டைத் தொட்டதைக் கண்டேன். மற்றவர்கள் அனைவரும் நீந்திக்கொண்டுதான் இருந்தனர். நான் வென்றுவிட்டேனா? என்னை நோக்கி ஓடிவந்துகொண்டிருந்த என் பெற்றோரின் ஆனந்தக் கண்ணீர் அக்கேள்விக்குப் பதிலளித்தது. என் எண்ண அலைகள் முட்டி மோதியவாறு, ஆச்சரியத்துடனும் ஆனந்தத்துடனும் நான் அங்கு நின்றேன்.

சிறு வயதிலிருந்து எனக்கு விளையாட்டு என்றாலே பெரும்பாலும் பிடிக்காது. குறிப்பாக, நீச்சல் என்றால் எனக்கு அறவே பிடிக்காது. சுள்ளென்று அடிக்கும் பிற்பகல் வெயிலில் நீச்சல் குளத்தில் இறங்குவது எனக்குச் சித்திரவதைபோல் தோன்றும். ஆகையால், தொடக்கப்பள்ளி ஆறாம் வகுப்பின் முடிவில் என்னை நீச்சல் வகுப்பில் சேர்த்துவிட்டதாக என் பெற்றோர் அறிவித்தபோது, என்மீது இடி விழுந்தாற்போல் இருந்தது. அழுதேன்; அலறினேன்; அடம்பிடித்தேன். ஆனால் என் பெற்றோர் தங்கள் முடிவை மாற்றிக்கொள்வதாக இல்லை. நீச்சல் ஒரு நல்ல உடற்பயிற்சி, மேலும் உன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய வாழ்க்கைத் திறன் என்றார்கள். வேறு வழியின்றி, நானும் வகுப்பில் சேர்ந்தேன்.

வாரத்திற்கு ஒருமுறை வகுப்பிற்கு நான் சென்றுவந்தாலும், எனக்கு நீச்சலில் சுத்தமாக ஈடுபாடு இல்லை. ஒவ்வொரு வகுப்பிலும் என் ஆசிரியர் எனக்குக் கற்றுக்கொடுத்தது செவிடன் காதில் ஊதிய சங்கைப் போன்றுதான் இருந்தது. ஏனோ தானோ என்றே நான் நீச்சல் அடித்தேன். இக்கொடுமை போதாதென்று, உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தவுடன் என்னை நீச்சல் இணைப்பாட வகுப்பில் சேருமாறு என் பெற்றோர் ஊக்குவித்தார்கள். நான் அவ்வாலோசனையை ஆரம்பத்தில் மறுத்தாலும், வேறு எந்த இணைப்பாட வகுப்பிற்கும் நான் தேர்ந்தெடுக்கப்படாததால் வேறு வழியின்றி நீச்சல் குழுவில் சேர்ந்தேன். என் பெற்றோரின் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. உடனே, நான் சிங்கப்பூரையே பிரதிநிதிக்கும் பெரிய நீச்சல் வீரராகிவிடுவேன் என்றெல்லாம் கனவு கண்டனர். எனக்கு ஊக்கமாகவும் ஆதரவாகவும் இருக்க என் பெற்றோர் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்தார்கள். தினமும் என் வீட்டுத் தொலைக்காட்சியில் நீச்சல் தொடர்புடைய காணொளிகள் மட்டுமே ஓடின. நான் அதிகம் பயிற்சி பெறவேண்டும் என்பதற்காக என் வட்டார நீச்சல் குளத்தின் உறுப்பினராகப் பணம் செலுத்திச் சேர்ந்தனர். அடிக்கடி என் பள்ளி மற்றும் வகுப்பு பயிற்றுவிப்பாளர்களைத் தொடர்புகொண்டு நான் என்னை மேம்படுத்திக்கொள்ள ஆலோசனைகளைக் கேட்டனர். ஆனால், நானோ என் பெற்றோரின் ஆதரவைப் புரிந்துகொள்ளாமல், முயற்சியே மேற்கொள்ளாமல் சுற்றி வந்தேன்.

இப்படியே ஓராண்டு பறந்து சென்றது. ஆண்டிறுதியில், சிங்கை முழுக்க அனைத்துப் பள்ளி மாணவர்களும் கலந்துகொண்ட மாபெரும் நீச்சல் போட்டி நடைபெறவிருந்தது. இப்போட்டியை நோக்கித் தான் ஆண்டு முழுதும் எங்கள் பள்ளி நீச்சல் குழுவினர் பயிற்சி

செய்துகொண்டிருந்தனர். அவ்வாறே போட்டி நாளும் வந்தது. என் பெற்றோர் இந்த நாளைத்தான் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். நான் நீந்துவதைக் காண அவர்கள் உறவினர்கள், நண்பர்கள், என அனைவரையும் அழைத்திருந்தனர். நானோ இதையெல்லாம் சற்றுக்கூடப் பொருட்படுத்தாமல், சற்றுக்கூட ஆர்வமின்றி போட்டிக்குச் சென்றேன்.

"முயற்சி திருவினையாக்கும்" என்பது பழமொழி. முயற்சியே போடாமல் வினையை எதிர்பார்ப்பது அநியாயமல்லவா? என் பெற்றோர் நான் முதற்பரிசைத் தட்டிச்செல்லவேண்டும் என்று உற்சாகத்துடன் எதிர்பார்த்தனர். நானோ எனது போட்டியில் கடைசி இடத்தைத்தான் பிடித்தேன். நீச்சலில் ஈடுபாடே இல்லாத என்னை அது பாதிக்கவில்லை; சற்று வேடிக்கையாகக்கூட தோன்றியது. ஆனால், எனது பெற்றோரின் வாடிய, ஏமாற்றம் நிறைந்த முகங்களைக் கண்டபோதும், என்னைப்பற்றிய அவர்களது நண்பர்களின் ஏளனம் கலந்த வார்த்தைகளைக் கேட்டபோதும், என் மனதில் ஒரு சிறு உறுத்தல் ஏற்பட்டதை நான் உணர்ந்தேன்.

போட்டி முடிந்த மறுநாள், எனது பள்ளி பயிற்றுவிப்பாளர் அவரைச் சந்திப்பதற்கு என்னை அழைத்தார். போட்டியில் எனது மோசமான காட்சிக்கு என்னைக் கடிந்துகொள்ளத்தான் அழைக்கிறார் என்றெண்ணிய எனக்கு, மனம் படபடவென தாளம் போட்டுக்கொண்டிருந்தது. ஆயினும், அவரைக் கண்டபோது, அவரது முகத்தில் கோபத்தைவிட வருத்தம்தான் தெள்ளத் தெளிவாகத் தென்பட்டது. சில வினாடிகள் என்னைக் கூர்ந்து கவனித்தபின், அவர் பேசத் துவங்கினார். "விமலா, நீ இந்த இணைப்பாட வகுப்பில் சேர்ந்த நாளிலிருந்தே உன்னைப்பற்றி இரண்டு விஷயங்களை நான் கவனித்திருக்கிறேன். ஒன்று, உன்னிடம் வெற்றிகரமான நீச்சல் வீராவதற்கான எல்லா உடல்ரீதியான திறன்களும் நுட்பங்களும் உள்ளன. இரண்டு, உனக்கு எவ்வளவு ஆதரவு கிட்டினாலும் நீச்சலில் நீ சற்றுக்கூட ஈடுபாடு காட்டவில்லை. நீச்சல்மீது அளவுகடந்த பற்றுடைய பல மாணவர்கள் போதுமான ஆதரவும் ஊக்கமும் இல்லாமல் தங்கள் கனவுகள் சாம்பலாவதைக் காண்கிறார்கள். நீயோ, எல்லா ஊக்கமும் பெற்றும், உனக்காகத் தீராது உழைக்கும் பெற்றோரைக்கூட மதிக்காமல் நீச்சலில் சிறிதளவுகூட முயற்சிப்பதில்லை. உன்னைச் சுற்றி இருப்பவர்களை நீ இவ்வாறே ஏமாற்றப்போகிறாயா?" அவ்வார்த்தைகள் என் செவிகளில் ரீங்காரமிட்டுக்கொண்டே இருந்தன. அதே சமயத்தில் போட்டிக்குப் பின்பு ஏமாற்றம் நிறைந்த என் பெற்றோரின் முகங்கள் என் கண்களுக்கு முன் தோன்றின. என் கண்களில் கண்ணீர்த்துளிகள் முத்தாய் ஜொலித்தன. இருப்பினும், அந்நிமிடமே நான் உறுதி பூண்டேன். நான் என் பெற்றோரின் கனவை நிறைவேற்றுவேன் என்று.

அன்றிலிருந்து என் வாழ்க்கையே மாறியதுபோல இருந்தது. நீச்சல் குளத்திற்குக் கஷ்டப்பட்டுச் செல்லாமல் இஷ்டப்பட்டுச் செல்ல ஆரம்பித்தேன். வெயிலையும் மழையையும் பொருட்படுத்தாமல் நீச்சலில் சிறந்து விளங்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் உழைத்தேன். எவ்வளவு சிறப்பாகச் செய்தாலும் என்னை மேம்படுத்திக்கொள்வதற்கான வழிகளையும் உத்திகளையும் என் பயிற்றுவிப்பாளர்களிடம் கேட்டுக்கொண்டே இருந்தேன். மனம் இருந்தால் மார்க்கமுண்டு என்பதை நிரூபித்துக் காட்டினேன். என்னிடம் தெரிந்த மாற்றத்தைக் கண்டு என் பயிற்றுவிப்பாளர்கள் வியந்தனர்; என் பெற்றோர் பூரித்தனர். நானும் நிற்கவில்லை. குறையா ஈடுபாட்டுடன் நீச்சலில் இறங்கினேன். அதில் கிடைக்கும் இன்பமும் அப்போதே எனக்குப் புரிந்தது.

ஓராண்டு உருண்டோடியது. என் நீச்சல் பயணத்தையே மாற்றியெழுதிய அதே போட்டி நடைபெறவிருந்தது. என் பெற்றோர் தலைகுனிந்த அதே போட்டியில் நான் வென்று காட்டவேண்டும் என்ற வெறியோடு இருந்தேன். என் வயிற்றில் பறந்த பட்டாம்பூச்சிகளை நான் தீயாய் மாற்றினேன். என் பெற்றோரை நான் மீண்டும் ஏமாற்றக்கூடாது. நான் வெல்லவேண்டும்...

"இவ்வாண்டு நமது தேசிய நீச்சல் போட்டியின் இரண்டாம் பிரிவு வெற்றியாளர், ராஃபிள்ஸ் பெண்கள் பள்ளியைச் சேர்ந்த விமலா!" ஒலிபெருக்கியில் வளாகம் முழுதும் ஒலித்த வார்த்தைகள் என் கனவிலிருந்து என்னை வெளிவரச் செய்தன. அந்நிமிடம் என் பெற்றோர் என்னை இறுக்கப் பிடித்து என்னை அணைத்தனர். எனது முயற்சிகளுக்கெல்லாம் பலன் கண்ட திருப்தியை நான் அப்போது உணர்ந்தேன்.

எவ்வளவுதான் ஊக்கமும் ஆதரவும் கிடைத்தாலும், ஈடுபாடு இன்றி ஏதும் சாதிக்க முடியாது என்று பொதுவாகவே கூறப்படும். அதில் எவ்வளவு உண்மை உள்ளது என்பதை நீச்சல் எனக்கு உணர்த்தியது. இந்தவொரு பாடத்தை மட்டும் வாழ்க்கை முழுதும் எடுத்துச்செல்வேன் என நான் அந்நிமிடம் உறுதி பூண்டேன். ஈடுபாடும் உழைப்பும் இருந்தால், எதிலும் வெற்றி நிச்சயம்!

***************